செய்தி வெளியீடு எண்: 18 நாள்:15.12.2020.

**தேனி மாவட்டம்**

**புன்செய் நிலங்கள் பாசனத்திற்காக சண்முகாநதி நீர்த்தேக்கத்திலிருந்து தண்ணீரை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் திறந்து வைத்தார்:-**

******

தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டத்தைச் சார்ந்த விவசாயிகள் பயன்பெறும் வகையில், புன்செய் நிலங்கள் பாசனத்திற்காக இராயப்பன்பட்டி கிராமத்திலுள்ள சண்முகாநதி நீர்த்தேக்கத்திலிருந்து தண்ணீரை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் இன்று (15.12.2020) தேனி பாராளுமன்ற உறுப்பினர் திரு. ப.ரவீந்திரநாத் அவர்கள் முன்னிலையில் திறந்து வைத்து தெரிவித்ததாவது,

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவின்படி, மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தலின்படி, உத்தமபாளையம் வட்டத்தைச் சார்ந்த விவசாயிகள் பயன்பெறும் வகையில், சண்முகாநதி நீர்த்தேக்கத்திலிருந்து உத்தமபாளையம் வட்டத்தைச் சார்ந்த 1640 ஏக்கர் புன்செய் நிலங்கள் பாசன வசதி பயன்பெறும் வகையில் இன்று (15.12.2020) முதல், நாள் ஒன்றுக்கு 14.47 மி.கன அடி வீதம் தண்ணீர் 50 நாட்களுக்கு திறந்து விடப்படுகிறது.

இதன்மூலம், தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டத்தைச் சார்ந்த இராயப்பன்பட்டி, மல்லிங்காபுரம், சின்னஓவுலாபுரம், எரசக்கநாயக்கனூர், கன்னிசேர்வைபட்டி, அழகபுரி, வெள்ளையம்மாள்புரம், ஓடைப்பட்டி ஆகிய 8 வருவாய் கிராமங்களுக்குட்பட்ட 1640 ஏக்கர் புன்செய் நிலங்கள் பாசன வசதி பெறும் வகையில் சண்முகாநதி நீர்த்தேக்கத்திலிருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. மேலும் விவசாயத்திற்கு சாதகமான சூழ்நிலை தற்போது நிலவுவதால் வேளாண் பெருங்குடி மக்கள் நீரை சிக்கனமாக பயன்படுத்தி நீர் மேலாண்மை மேற்கொண்டு உயர் மகசூல் பெற்று பயனடையுமாறு தெரிவித்தார்.

அதனைத்தொடர்ந்து, பொதுமக்களின் கோரிக்கைகிணங்க, காமயகவுண்டன்பட்டி அருகில் உள்ள சண்முக நாதன் கோவிலுக்கு பக்தர்கள் சென்று வருவதற்கு ஏதுவாக பாதை சீரமைப்பு பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கோவில் அடிவார பகுதியிலிருந்து, 3 கி.மீட்டர் தூரம் நடந்து சென்று, பாராளுமன்ற உறுப்பினர் அவர்கள் முன்னிலையில் ஆய்வு மேற்கொண்டார்.

இந்நிகழ்வின் போது, உதவி ஆட்சியர் (பயிற்சி) ஞ. தாக்ரே சுபம், இ.ஆ.ப., உத்தமபாளையம் வருவாய் கோட்டாட்சியர் (பொ) இரா.நிறைதி, வட்டாட்சியர் உதயராணி, பொதுப்பணித்துறை (நீர்வள ஆதார அமைப்பு) உதவி செயற்பொறியாளர்கள் மொக்கைமாயன், உதவி பொறியாளர்கள் பிரேம்ராஜ்குமார், கதிரேஷ்குமார் மற்றும் விவசாயிகள் உட்பட ஏராளமானனோர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**